**DEPOSITION OF WITNESS**

In the Court of District Munsif cum Judicial Magistrate, Cheyyur
CC Case No.538/2025
Prosecution witnesses. PW2, LW3

| | |
|---|---|
| பெயர். திருமதி.மங்களபிரியா | ஜாதி. |
| கணவர் பெயர்.திரு.குசலவன் | தொழில். |
| கிராமம். | சமயம். |
| தாலுக்கா. | வயது. |

**Solemnly affirmed in accordance with the provision of oaths Act 1969 on the day of July, 2026**

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளார்.

<u>முதல் விசாரணை</u>:-

1. நான் தற்போது வேலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2. இதற்கு முன்பு நான் 2025ம் வருடம் மதுராந்தகம் மதுவிலக்கு அமல் பிரிவல் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது கடந்த 05.01.2025ம் தேதி நானும், தலைமை காவலர் தர்மன் 304 மற்றும் தலைமை காவலர் ஜெயபால் 314 ஆகியோர் பார்ட்டி சகிதம் மதுவிலக்கு வேட்டையாக செய்யூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட இடங்களில் கண்காணித்து வந்தபோது அம்மனூர் கிராமம் வெற்றிச்செல்வன் என்பவரின் கழனியில் உள்ள பனஞ்சாலையில் இருந்த ஒரு ஆண் நபரை பெயர் விலாசம் கேட் தெரிந்த தியாகராஜன், வயது 45, த/பெ.முருகேசன், கெங்கையம்மன் கோயில் தெரு, வடக்கு செய்யூர் கிராமம், செய்யூர் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம் என்பவர் எங்களை கண்டதும் தப்பி ஓட முயற்சி செய்தவரை மடக்கி பிடித்து அவர் இருந்த இடத்தை சோதனை செய்தபோது சுமார் 10 லிட்டர் கொள்ளளவு கொண்ட மண்பாணையில் சுமார் 5 லிட்டர் பனங்கள் இருந்தது. அதை முகர்ந்து பார்த்தபோது புளித்த வாடையுடன் வாய்குமட்டலும் வந்ததால் அவர்

பனங்கள்ளை இறக்கி விற்பனை செய்ய வைத்திருந்தது தெரிந்தது. எனவே மேற்படி குற்றத்திற்காக நான் எதிரியை காலை 8.00 மணிக்கு கைது செய்தும் எதிரியிடமிருந்து இருந்து பனங்களை போலிஸ் சாட்சிகள் முன்னிலையில் 8.15 மணிக்கு மகஜரில் கைப்பற்றி கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தேன். **(அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்பு 8.30 மணிக்கு அழித்தல் சான்று தயார் செய்து எங்கள் முன்னிலையில் பாதுகாப்பான முறையில் பனங்கள்ளை கொட்டி அழித்து அழித்தல் மகசர் தயார் செய்தேன். **(அந்த அழித்தல் மகசர் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

3. பின்பு 14.00 மணிக்கு எதிரி மீது நிலைய குற்ற எண்.5/2025, U/s.4(1)(C) TNP Act r/w 4(1)(d) TNP Act ல் வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** மேற்படி எதிரி 35(1) BNSS ன்படி தக்க பிணையில் விடுவிக்கப்பட்டார். பின் இறுதியாக விசாரணையை முடித்து எதிரி மீது கடந்த 05.01.2025 ம் தேதி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>

நான் மதுவிலக்கு வேட்டைக்கு செல்லும்போது அரசு வாகனத்தில் சென்றேனா அல்லது தனியார் வாகனத்தில் சென்றேனா என்றால் அரசு வாகனத்தில் சென்றேன். அந்த விவரத்தை புகாரிலோ, சாட்சியிலும், அறிக்கையிலும் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. சம்பவ இடத்தில் பொதுஜன சாட்சிகளை இந்த வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் இல்லை. கைப்பற்றிய கள்ளை முகர்ந்து பார்த்து வாய்குமட்டல் ஏற்பட்டு மருத்துவமனையில் யாரேனும் அனுமதி செய்யப்பட்டாரா என்றால் இல்லை.

எதிரியை வழக்கு பதிவு செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யவில்லை என்றால் காவல் நிலைய பிணையில் விடுவிக்கப்பட்டார். கைப்பற்றிய வழக்கு சொத்தை நீதிமன்றத்தில் அனுப்பவில்லை என்றாலும் ஆய்விற்கு அனுப்பவில்லை என்றாலும் அழித்தல் மகசர் தாக்கல் செய்துள்ளேன். குற்ற பத்திரிக்கையில் வழக்கு சொத்தை நானே கைப்பற்றி நீதிமன்றத்தின் அனுமதியில்லாமல் நானே அழித்தேன் என்றால் சரிதான்.

சம்பவ இடத்தில் பார்வை மகசர் தயார் செய்யவில்லை என்றால் சரிதான். நான் முதல் தகவல் அறிக்கையை 05.01.2025 அன்று பதிவு செய்து 29.01.2025 நீதிமன்றத்திற்கு அனுப்பினேன் என்றால் சரிதான். இந்த காலதாமதத்திற்கு குற்ற பத்திரிக்கையில் காரணம் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும் புள்ளி விவர கணக்கிற்காக வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றாலும் உண்மையில் சம்பவம் நடந்திருந்தால் பொதுஜன சாட்சிகளை சாட்சியாக சேர்த்திருப்பேன் என்றாலும் பொதுஜன சாட்சிகளை ஏன் சேர்க்கவில்லை என்ற காரணத்தையும் சொல்லவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் எதிரிக்கும், இந்த வழக்குக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**(இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக் கொள்ளப்படுகிறது)**
**மறு விசாரணை...** இல்லை

Signature of Witness

Taken down before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

**Sd/-Tmt.C.M.Amaravathi**
District Munsif Cum Judicial Magistrate
Cheyyur.